**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>**

முன்னிலை : திரு.அ.முகம்மது அலி. பி.எஸ்சி., பி.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி, காஞ்சிபுரம்.

2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 30–ம் நாள் வியாழக்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 230/2023</u>**

**<u>C.N.R.No.TNKP070010861086–2023</u>**

G.வினோத்குமார் ...வாதி

// எதிர்//

வேண்டாமணி ..பிரதிவாதி

இவ்வழக்கானது என் முன்பாக கடந்த 15.07.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.வரதன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.ரமேஷ் குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வாதி தரப்பு வழக்குரை, பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை, இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

வாதி தரப்பில் இவ்வழக்கானது வாதி தாவா சொத்தின் அனுபவத்தினை பிரதிவாதி மற்றும் அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்விதத்திலும் குறுக்கீடு செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், மற்றும் வழக்கு செலவுத்தொகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதி தரப்பில் வழக்கு சொத்து சந்தவேலூர் கிராமம் ஏ பிளாக்கில் பட்டா எண்.2364–ல் அடங்கியுள்ளதாகும் என்றும், ஆதியில் இச்சொத்து சையத் அகமது ராவுத்தர், த/பெ.காதர் பாட்ஷா ராவுத்தர், சையது அகமது ராவுத்தர் குமாரர்கள் அப்துல் ஜப்பார் மற்றும் அப்துல் கபூர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டதாகும் என்றும், இச்சொத்தினை வாதியின் தாய் சாந்தா தேவி 24.08.1982 –ல் ரூ.37,000/– ஒரு பதிவு செய்த கிரைய ஆவணம் மூலம் வாங்கியுள்ளார் என்றும், அந்த ஆவணம் வாலாஜாபாத் பதிவு அலுவலகத்தில் எண்.2064/1982 என்று பதிவாகியுள்ளது என்றும், தன் தாய் கிரையம் பெற்ற நாள் முதல் பூரண உரிமையாளராய் தொடர்ந்து அனுபவித்து வந்து வழக்கு முதல் ஐட்டம் புல எண்.37/5A– 1 ஏக்கர் 02 செண்ட் என்றும், பின்னிட்டு புல எண்.37/5A1A 0.37.30 ஏர்ஸ் என்றும், புல எண்.37/5A1C 0.80 ஏர்ஸ் ஆகவும், பட்டா எண்.880ல் வழங்கப்பட்டது என்றும், உட்பிரிவு 31.03.2008ல்

ஏற்பட்டதாகும் என்றும், தன் தாய் தன்னுடைய உரிமை மூலம் மற்றும் சுவாதீனம் படிக்கும் 27.03.2014–ல் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் வாதி பெயருக்கு எழுதி கொடுத்து அப்பத்திரம் சுங்குவார் சத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1327/2014 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது எ'னறும், செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுக்கும் காலத்தில் வாதியின் தாய் செட்டில்மெண்ட் பத்திரம் மூல பத்திரம் மற்றும் சொத்தினையும் அன்றே வாதி வசம் சுவாதீனம் கொடுத்துள்ளதாகவும், வாதியின் சுவாதீனம் மற்றும் மூலம் படி பட்டா எண்.2364 என்று வாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றும், மேற்படி சூழ்நிலையில் இவ்வழக்கு பிரதிவாதி சந்தவேலூர் தலைவர் ஆன பின் 15.06.2023 அன்று ஸ்ரீபெரும்புதூர் வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரியுடன் வாதி இடத்திற்கு வந்தார் என்றும், அதற்கு ஏன் அவர்கள் வருகை தந்துள்ளார்கள் என்று வாதி கேட்ட காலத்தில் இந்த வழக்கு பிரதிவாதியின் கோரிக்கை படி வந்துள்ளதாகவும், புல எண்.41–ல் உள்ள தாங்கல் மழை காலத்தில் நிரம்பி வழியும் காலத்தில் நிரந்தரமான கால்வாய் வடிகால் இல்லாததால் உபரி நீர் செல்ல வழி இல்லாமல் புறம்போக்கு நிலத்திலும் மற்றும் பட்டா நிலங்களின் பெயரில் பாய்ந்து செல்வதாகவும், அம்மாதிரி பரவலாக வாதியின் நிலங்களின் பெயரில் பாய்ந்து செல்வதாகவும், அதற்காக வாதியின் நிலங்களில் ஓரத்தில் மூன்று அடி ஆழத்திற்கு கால்வாய் உண்டாக்க வேண்டும் என்றும், அம்மாதிரி கால்வாய் உண்டாக்கிய பின் அதன் பேரில் ஸ்லாப்புகள் வைத்து மூடி, மூடிய பின் அதன் மேல் சுற்றுச்சுவர் கட்டிக்கொள்ள வேண்டும் என்று பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் வட்டாட்சியர் தெரிவித்தார் என்றும், இம்மாதிரி கால்வாய் நிரம்பி வழியும் காலத்தில் அரசு ஆவணங்களில் உபரி மழை நீர் வடிய ஏற்கனவே கால்வாய் படம் உள்ளது என்றும், அதற்கு மாறாக இம்மாதிரி கால்வாய் தோண்ட வேண்டுமென்று வருவாய் துறையில் கேட்பது சரியல்ல என்று வாதி கூறியதாவும், உடனே அருகில் இருந்த கிராம் நிர்வாக அதிகாரியிடம் அம்மாதிரி கால்வாய் செல்ல ஏதாவது படம் கொண்டு வந்துள்ளீரா என்று தாழ்ந்த குரலில் வட்டாட்சியர் கேட்க அம்மாதிரி வரைபடம் ஒன்றும் கொண்டு வரவில்லை என்று கிராம நிர்வாக அதிகாரி தெரிவித்தார் என்றும், அதற்கு வாதி நீர்நிலைகள் செல்வதற்கு பட்டா கால்வாய்கள் மற்றும் மழை நீர் வடிகால் ஆகியவற்றிற்கு ஏற்கனவே வைசியராய் கக்கன் பிரபு காலத்திலேயே கால்வாய்களுக்கு தனியாக வரைபடம் உள்ளது என்றும், எந்த வித ஆவணத்தையும் கொண்டுவராமல் அதனை மறைத்து வருவாய்த் துறையில் இம்மாதிரி வாதிக்கு மன உளைச்சலையும் தொந்தரவும் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் அவர்கள் சட்டத்திற்கு புறம்பாக செயலை செயல்பட கூறிவிட்டு சென்றனர் என்றும், இம்மாதிரி செய்கை பிரதிவாதி தூண்டுதலின் பெயரில்தான் வாதிக்கு மன உளைச்சலும்

சங்கடமும் ஏற்பட்டது என்றும், இம்மாதிரி கூறிய வட்டாட்சியர் வாதி தன்னுடை நிலத்தில் ஏதாவது சுற்றுச்சுவர் கட்ட முற்பட்டால் அதற்கு முன்னரே அவரது அனுமதி பெற்றுதான் சுற்றுச்சுவர் கட்ட வேண்டும் என்று அறிவுறுத்தினார் என்றும் அப்படி அனுமதி இல்லாமல் ஏதாவது சுற்றுச்சுவர் கட்டப்பட்டால் அதனை வருவாய் துறை மூலமாக இடிக்க நேரிடும் என்று பயமுறுத்தினார் என்றும், இச்செயல் கடந்த 15.06.2023ல் நடந்ததாகும் என்றும், வாதியின் சொத்துக்களுக்கும் வாதியின் தந்தை ஜிசி ஜெயின் சொத்துக்களுக்கும் புல எண்கள்37/1, 37/3, 37/4 மற்றும் 38/2 பட்டா நிலங்கள் உள்ளன என்றும், பிரதிவாதி சந்தவேலூர் மக்களை திருப்திபடுத்தும் பொருட்டும் அவர்களிடமிருந்து பணம் பறிக்கும் பொருட்டும் சட்டத்திற்கு புறம்பான செய்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும், அம்மாதிரி தனியார் சொத்துக்களில் வருவாய் துறை அதிகாரிகள் பிரவேசிச்கவோ உத்தரவு வழங்கவோ சட்டப்படி எந்த அதிகாரமும் இல்லை என்றும், இவ்வழக்கினை பிரதிவாதி பெயரில் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளதாகவும், பஞ்சாயத்து பெயரில் தாக்ககல் செய்யவில்லை என்றும், ஆகையால் பிரிவு 80 சிபிசி அறிவிப்பு இந்த வழக்கிற்கு அனுப்ப தேவை இல்லை என்றும், தற்போது வாதி தன்னுடைய பட்டா நிலங்களை பாதுகாக்க வேண்டி சுற்றுச்சுவர் வைப்பதை தடுக்க பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக வகையில் ஈடுபட்டுள்ளார் என்றும், வாதியினுடைய வழக்கு நியாயமானது உண்மையானது என்றும், எனவே வாதி தாவா சொத்தின் அனுபவத்தினை பிரதிவாதியோ அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்விதத்திலும் குறுக்கீடு செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

2. <u>எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>

பிரதிவாதி தரப்பில் வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சங்கதிகள் படியும், சட்டப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் பிரதிவாதி ஒப்புக் கொண்டதை தவிர மற்றவற்றை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும் என்றும், பிரதிவாதி சந்தவேலூர் ஊராட்சி மன்ற தலைவராக 2021ல் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது வரை பணி செய்து வருவதாகவும், தாங்கல் பகுதி எண் சர்வே எண்.41ல் உள்ளதாகவும், பிரிட்டிஷ் காலத்திலேயே கால்வாய் சம்மந்தமாக வரைபடம் அரசிடம் உள்ளதாகவும், பிரதிவாதி அரசு அதிகாரிகளுடன் சென்று வாதியை மிரட்டவில்லை என்றும், அரசு அதிகாரிகள் பிரதிவாதி தூண்டுதல் பெயரில் வாதி இடத்தில் ஆய்வு செய்ததாக குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், வாதி கால்வாய் பகுதியை ஆக்கிரமிப்பு செய்யவேண்டி பிரதிவாதி மீது தவறான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளதாகவும், வாதியும் அவரது

குடும்ப உறுப்பினர்களும் சர்வே எண்.37/5 மற்றும் அதிலுள்ள உட்பிரிவுகளுக்கு உரிமையாளர்கள் என்றும், சந்தவேலூர் கிராமத்தில் உள்ள வேளாங்கண்ணி நகருக்கு அருகில் ஒரு ஏரி உள்ளது என்றும், அந்த ஏரி பல நூற்றாண்டுகளாக உள்ளது என்றும், அதன் பெயர் கொசவன்தாங்கல் ஏரி என்றும், அந்த ஏரியின் மொத்த பரப்பளவு ஏக்கர் 8.37 செண்ட் ஆகும் என்றும், சர்வே எண்.41–ல் உள்ளதாகவும், மழைக் காலங்களில் அந்த ஏரியில் தேங்கும் தண்ணீர் அளவு அதிகமானால் அதிகப்படியான தண்ணீர் வழிந்து ஓடுவதற்காக ஒரு கால்வாய் உள்ளது என்றும், இதை ட்ரெயின் சேனல் என்பார்கள் என்றும், இந்த ட்ரெயின் சேனல், கொசவன் தாங்கல் ஏரியில் ஆரம்பித்து சர்வே எண்கள்.36 & 37 இடையில் செல்கிறது என்றும், இந்த ட்ரெயின் சேனல் சந்தவேலூர் பெரிய ஏரி கால்வாயில் முடிவடைகிறது என்றும், இந்த ட்ரெயின் சேனல் அரசு கிராம வரைபடத்தில் மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இருப்பினும் இந்த ட்ரெயின் சேனலுக்கு என்று தனியாக சர்வே எண் எதுவும் சர்வே துறையினரால் கொடுக்கப்படவில்லை என்றும், வாதியும் அவரது குடும்பத்தினரும் கால்வாய்க்கு பக்கத்தில் இருந்த அனைத்து நிலங்களையும் கிரயம் பெற்றனர் என்றும், பின்னர் 08.10.2022 அன்று ஏராளமான குன்று மண்ணை கொண்டு அந்த ட்ரெயின் சேனலை சமப்படுத்தி ஆக்கிரமித்து முற்றிலுமாக தூற்று அவர்களுடைய இதர நிலங்களுடன் சேர்த்து விட்டார்கள் என்றும், பிரதிவாதி சந்தவேலூர் கிமத்தின் ஊராட்சி மன்ற தலைவர் என்றும், வாதி செய்த இந்த அடாவடிதனத்தை பிரதிவாதி கிராம மக்களுடன் சேர்ந்து எதிர்த்ததாகவும், அதனால் வெகுண்ட வாதி பிரதிவாதி பெயரில் தனிப்பட்ட பெயரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரதிவாதி வருவாய் மற்றும் சர்வே துறையினரை வரவழைத்து வாதி செய்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டியதாகவும், ஆனால் அவர்கள் அனைவரும் ட்ரெயின் சேனலுக்கு என்று தனி சர்வே நம்பர் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அந்த ட்ரெயின் சேனல் இருக்கும் பகுதி வாதியின் பட்டா நிலத்திலும் இருப்பதாக சொல்லி வாதிக்கு சாதகமாக மாறிவிட்டார்கள் என்றும், அந்த ட்ரெயின் சேனலானது வாதிக்கு சொந்தமான நிலங்களுக்கு நடுவில் செல்வது உண்மை தான் என்றும், ஆனால் அது வாதிக்கு சொந்தம் என்று சொல்வது தவறு என்றும், மேலும், அந்த ட்ரெயின் சேனல் போக அதன் இரண்டு புறங்களிலும் இருக்கும் மீதி நிலத்திற்கு தான் வாதிக்கு சொந்தமானது என்றும், மேலும் அவ்வாறான நீர் பிடிப்பு பகுதிக்கு வாதி உரிமை கோருவது சரியல்ல என்றும், மேலும் அந்த ட்ரெயின் சேனல் பொது மக்களுக்கும் சமுதாயத்திற்கும் பாத்தியப்பட்டதாகும் என்றும், அதை ஆக்கிரமிக்கவோ அல்லது தன் நிலத்துடன் சேர்த்துக் கொள்ளவோ வாதிக்கு எந்த உரிமையும் தகுதியும் இல்லை என்றும், இதிலிருந்து ரெவென்யூ துறையியனரும் சர்வே

துறையினரும் வாதிக்கு சாதகமாக உள்ளனர் என்பது தெரியவந்தது என்றும், வாதி சட்டப்படி இந்த வழக்கை தமிழ்நாடு அரசின் மீதுதான் தொடுத்திருக்க வேண்டும் என்றும் அதற்கு சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு 80ன் கீழ் முன் அறிவிப்பு கொடுத்திருக்க வேண்டும் என்றும், ஆனால் வாதி அவ்வாறு செய்யாமல் கிராம தலைவரான பிரதிவாதியை தனிப்பட்ட நபர் போல சித்தரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதனால் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் வாதி பல ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆனால் அந்த ஆவணங்களில் கால்வாய் ஒரு பவுண்டரியாக காட்டப்படவில்லை என்றும், ஏனென்றால் அவ்வாறு ட்ரெயின் சேனலை ஒரு பவுண்டரியாக காண்பிக்காமல் கால்வாய் இருப்பது வெட்ட வெளிச்சம் ஆகிவிடும் என்றும், அதனால் வாதி அவருடைய ஆவணங்களில் சர்வே எண்ணையும், சப்டிவிஷன் எண்ணையும் குறிப்பிட்டுள்ளாரே தவிர கால்வாயை ஒரு பவுண்டரியாக காட்டவில்லை என்றும், மேலும் நீர் நிலைகளை சமுதாய நலனுக்காக உபயோகத்திற்காக காப்பாற்ற வேண்டிய ரெவின்யூ துறையும் சர்வே துறையினரும் வாதியுடன் கைகோர்த்துக் கொண்டுள்ளனர் என்றும், அரசு கொண்டு வந்த பல்வேறு சட்டங்கள் வாயிலாக அனைத்து நீர் நிலைகளும் நீர் பிடிப்பு பகுதிகளும் கால்வாய் பகுதிகளும் அரசுக்கு சொந்தமாகி விட்டன என்றும், அதனால் வாதி கால்வாய் பகுதியானது தன் பட்டா நிலத்தில் இருப்பதாக சொல்லி ட்ரெயின் சேனலுக்கு உரிமை கேட்க முடியாது என்றும், அந்த ட்ரெயின் சேனலை தன் நிலங்களுடன் இணைத்துக் கொள்வதற்காக வாதி பல பொய் உரைகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அரசு நீர் நிலைகளை காப்பாற்ற வேண்டியும் நீர் நிலைகளில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியும் சிறப்பு சட்டம் இயற்றியுள்ளது என்றும், அதன்படி வாதி ஒரு நீர்நிலை ஆக்கிரமிப்பாளர் என்றும், அதனால் காவல் துறையின் உதவியுடன் அவரை வெளியேற்ற ட்ரெயின் சேனலை பழையபடி கொண்டுவர அரசுக்கு அதிகாரம் உள்ளது என்றும், இந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ய வேண்டி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் நில ஆக்கிரமிப்பு சட்டப்படி வாதிக்கு நிரந்தர உறுத்து கட்டளை வழங்கும் அதிகாரம் தடை செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி இந்த வழக்கை ட்ரெயின் சேனலை முற்றிலுமாக தூற்றிவிட்டு தன் நிலத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டி தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி சட்டப்படி இந்த வழக்கை தமிழ்நாடு அரசின் மீது தான் தொடுத்து இருக்க வேண்டும். அதற்கு சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு 80 குறுக்கே நிற்கிறது. அதனால் அதை செல்லாக்காசாக்க வாதி பிரதிவாதி மீது தனிப்பட்ட பெயரில் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஒரு பொது பதவியில் உள்ளவர் மீது அவர் பதவி குறிப்பிட்டுதான் வழக்கு

தாக்கல் செய்ய வேண்டும். தனிப்பட்ட பெயரில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றும் அது சட்டப்படி தவறு என்றும், கிராம தலைவர் ஆகிய பிரதிவாதி கால்வாயை மீட்க கோரி பொது மக்களுடன் சேர்ந்து மறியல் செய்ததாகவும், பல மனுக்களை அனைத்து அரசு துறையிரிடம் கொடுத்து உள்ளதாகவும், ஒரு கிராமத் தலைவர் என்ற முறையிலும் இந்த நாட்டின் குடிமகன் என்ற முறையிலும் நீர் பிடிப்பு பகுதிகளை காப்பாற்ற வேண்டி போராடும் உரிமை தனக்கு உண்டு என்றும், பிரதிவாதியோ அல்லது இதர கிராம்த்தினரோ எந்தவிதமான சட்டத்திற்கு புறம்பான செயல்களை செய்யவில்லை என்றும், தாங்கள் அனைவரும் ட்ரெயின் சேனலை காப்பாற்ற வேண்டி அமைதியான முறையில் போராடுவதாகவும், வாதி ஒரு நீர்நிலை ஆக்கிரமிப்பாளர் என்றும், வாதி சட்டத்தை மீறி செயல்பட்டு வருவதாகவும், வாதியின் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், அதனால் வாதியின் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

3.வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் பரிசீலினை செய்து இந்நீதிமன்றத்தால் கடந்த 03.09.2024 தேதியில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.

1. வாதி கோரியபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்க கூடியதா?

2. வாதிக்கு கிடைக்க கூடிய இதர பரிகாரங்கள் என்ன ?

**4.** வாதி தரப்பில் வாதி வினோத்குமார் வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்டு சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி வேண்டாமணி பி.சா.1–ஆக விசாரிக்கப்பட்டு சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் தாக்கல் செய்து பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யபட்டுள்ளது.

**<u>5. எழுவினா 1 க்கான தீர்வு</u>**

1. வா.சா.1–சாட்சியத்தில் வழக்கு சொத்து ஆதியில் சையத் அகமது ராவுத்தர், மற்றும் அவரது குமாரர்கள் அப்துல் ஜப்பார் மற்றும் அப்துல் கபூர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டதாகும், மேற்படி சொத்தினை வாதியின் தாய் சாந்தா தேவி 24.08.1982 –ல் ரூ.37,000/– ஒரு பதிவு செய்த கிரைய ஆவணம் மூலம் வாங்கி வாலாஜாபாத் பதிவு அலுவலகத்தில் எண்.2064/1982 என்று பதிவாகியுள்ளதாகவும், தன் தாய் கிரையம் பெற்ற நாள் முதல் பூரண உரிமையாளராய் தொடர்ந்து அனுபவித்து வந்து வழக்கு முதல் ஐட்டம் புல எண்.37/5A– 1 ஏக்கர் 02 செண்ட் என்றும், பின்னிட்டு புல எண்.37/5A1A 0.37.30 ஏர்ஸ் என்றும், புல எண்.37/5A1C 0.80 ஏர்ஸ் ஆகவும்,

பட்டா எண்.880ல் வழங்கப்பட்டுள்ளதாகவும், உட்பிரிவு 31.03.2008ல் ஏற்பட்டு தன் தாய் தன்னுடைய உரிமை மூலம் மற்றும் சுவாதீனம் படிக்கு 27.03.2014–ல் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் வாதி பெயருக்கு எழுதி கொடுத்து சுங்குவார் சத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1327/2014 என்று பதிவு செய்யப்பட்டு, மேற்படி சொத்தினை அன்றே வாதி வசம் சுவாதீனம் கொடுத்துள்ளதாகவும், வாதியின் சுவாதீனம் படி பட்டா எண்.2364 என்று வாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1ன் படியாக 24.08.1982 தேதியில் சாந்தா தேவி அவர்களுக்கு காதர் பாட்ஷா, அப்துல் ஜப்பார் மற்றும் அப்துல் கபூர் எழுதிக் கொடுத்துள்ள கிரைய ஆவண எண்.2604/1982 என்பதாக காணப்படுகிறது. அதன்படியாக சாந்தவேலூர் கிராம புல எண்.37/5ஏ– 1.02 ஏக்கர் மற்றும் 37/5டி –0.83 ஏக்கர் ஆக மொத்தம் 1.85 ஏக்கர் கிரையம் கொடுத்துள்ளதாக காணப்படுகிறது. மேலும் வா.சா.ஆ.2ன் படியாக 27.03.2014 தேதியில் சாந்தா தேவி என்பவர் வினோத்குமார் என்பவருக்கு எழுதிக் கொடுத்துள்ள தான செட்டில் மெண்ட் ஆவண எண்.1327/2014 என்பதாக காணப்படுகிறது. அதன்படியாக சாந்தவேலூர் கிராம பழைய புல எண்.37/5ஏ– புதிய புல எண்.37/5ஏ1ஏ –87 1/2 செண்ட், 37/5ஏ1சி –0.02 செண்ட் மற்றும் 37/5டி –0.54 செண்ட் ஆக மொத்தம் 1 ஏக்கர் 43 1/2 செண்ட் செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளதாக காணப்படுகிறது.

3. மேலும் வா.சா.ஆ.3ன்படியாக புல எண்.37க்கான புல வரைபடமாக காணப்படுகிறது. வா.சா.ஆ.4ன் படியாக சாந்தவேலூர் கிராம புல எண்.37/5ஏ1ஏ –37.30 ஏர்ஸ் 37/5ஏ1சி –0.80 ஏர்ஸ் மற்றும் 37/5டி1 –28.50 ஏர்ஸட ஆக மொத்தம்66.60 ஏர்ஸ் பட்டா எண்.880 என சாந்தா தேவி பெயரில் வழங்கப்பட்டுள்ளதாக காணப்படுகிறது. வா.சா.ஆ.5மற்றும் வா.சாஆ.9ன் படியாக சாந்தவேலூர் கிராம புல எண்.37/5ஏ1ஏ –37.30 ஏர்ஸ் 37/5ஏ1சி –0.80 ஏர்ஸ் மற்றும் 37/5டி1 –28.50 ஏர்ஸட ஆக மொத்தம்66.60 ஏர்ஸ் பட்டா எண்.2364 என வினோத்குமார் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாக கணிணி சிட்டாவாக காணப்படுகிறது. வா.சா.ஆ6ன் படியாக சாந்தவேலூர் கிராம புல எண்.37/5ஏ1பி–0.1.90 ஏர்ஸ் பட்டா எண்.3191 என வினோத்குமார் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாக கணிணி சிட்டாவாக காணப்படுகிறது.

4. மேலும் வா.சா.ஆ.7ன் படியாக 15.06.2018 தேதியில் வினோத்குமார் அவர்களுக்கு நித்தியானந்தன் எழுதிக் கொடுத்துள்ள கிரைய ஆவண எண்.1907/2018 என்பதாக காணப்படுகிறது. அதன்படியாக சாந்தவேலூர் கிராம பழைய புல எண்.37/5ஏ1 புதிய புல எண்.37/5ஏ1பி– 1650 சதுரடி காலி

மனை மற்றும் 425 சதுரடி காலி மனை மொத்தம் 2075 சதுரடி காலி மனை கிரையம் கொடுத்துள்ளதாக காணப்படுகிறது. வா.சா.ஆ8ன் படியாக சாந்தவேலூர் கிராம புல எண்.37/5ஏ1பி–0.1.90 ஏர்ஸ் பட்டா எண்.3191 என வினோத்குமார் பெயரில் வீட்டு மனை என வழங்கப்பட்டுள்ள அடங்கல் கணக்காக காணப்படுகிறது.

5. அதேசமயம் பி.சா.1 சாட்சியத்தில் தான் சந்தவேலூர் ஊராட்சி மன்ற தலைவர் என்றும், வாதியும் அவரது குடும்ப உறுப்பினர்களும் சர்வே எண்.37ல் உள்ள அனைத்து உட்பிரிவுகளுக்கும் உரிமையாளர்கள் என்றும், சந்தவேலூர் கிராமத்தில் உள்ள வேளாங்கண்ணி நகருக்கு அருகில் ஒரு ஏரி உள்ளது என்றும், அந்த ஏரி பல நூற்றாண்டுகளாக உள்ளது என்றும், அதன் பெயர் கொசவன்தாங்கல் ஏரி என்றும், அந்த ஏரியின் மொத்த பரப்பளவு ஏக்கர் 8.37 செண்ட் ஆகும் என்றும் மழைக் காலங்களில் அந்த ஏரியில் தேங்கும் தண்ணீர் அளவு அதிகமானால் அதிகப்படியான தண்ணீர் வழிந்து ஓடுவதற்காக ஒரு கால்வாய் உள்ளது என்றும், இதை ட்ரெயின் சேனல் என்பார்கள் என்றும், இந்த ட்ரெயின் சேனல், கொசவன் தாங்கல் ஏரியில் ஆரம்பித்து சர்வே எண்கள்.36 & 37 இடையில் செல்கிறது என்றும், இந்த ட்ரெயின் சேனல் சந்தவேலூர் பெரிய ஏரி கால்வாயில் முடிவடைகிறது என்றும், இந்த ட்ரெயின் சேனல் பிரிட்டிஷ் கால அரசு கிராம வரைபடத்தில் மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இருப்பினும் இந்த ட்ரெயின் சேனலுக்கு என்று தனியாக சர்வே எண் எதுவும் சர்வே துறையினரால் கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

6. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.1ன் படியாக சாந்தவேலூர் கிராம வரைபடம் என்பதாகவும், புல எண்.336 பெரிய ஏரி உள்ளதாகவும், புல எண்.41ல் கொசவன்தாங்கல் ஏரி உள்ளதாகவும், அதிலிருந்து செல்லும் தண்ணீரானது வாய்க்காலாக பல்வேறு நிலங்கள் வழியாக சென்று வருவதாகவும், அதற்கான ஏரி வாய்க்கால் பகுதி புல எண்.34, 35, 36 மற்றும் 37ல் பகுதியாக சென்று வருவதாக காணப்படுகிறது. பி.சா.ஆ.2ன் படியாக நீர்பிடிப்பு கால்வாய் பகுதியில் வாதி கட்டிடங்கள் கட்டியும் மற்றும் ஜே.சி.பி வைத்து இடத்தினை சமப்படுத்தியதற்கான புகைப்படம் மற்றும் சி.டி. என்பதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.3ன் படியாக சந்தவேலூர் கிராம சொத்து சம்மந்தமான வருவாய் கணக்கு விவரப்படியாக கொசவன்தாங்கல் சர்வே எண்.41 மற்றும் சர்வே எண்.336ல் சந்தவேலூர் பெரிய ஏரி உள்ளதாகவும், சர்வே எண்.37/1 மற்றும் 37/2 நீர்பிடிப்பு பகுதி என்பதாகவும், 37/3, 37/4, 37/5, 37/5ஏ பகுதிகளில் நீர்பிடிப்பு உள்ளதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்பதாக காணப்படுகிறது. பி.சா.ஆ.4ன் படியாக Tamil Nadu Protection of Tanks and Eviction of Encroachment Act 2007 சட்டத்தின் அரசிதழாக காணப்படுகிறது.

7. மேலும் வா.சா.1–சாட்சியத்தில் பிரதிவாதி சந்தவேலூர் தலைவர் ஆன பின் 15.06.2023 அன்று ஸ்ரீபெரும்புதூர் வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரியுடன் வாதி இடத்திற்கு பிரதிவாதியின் கோரிக்கை படி வந்துள்ளதாகவும், புல எண்.41–ல் உள்ள தாங்கல் மழை காலத்தில் நிரம்பி வழியும் காலத்தில் நிரந்தரமான கால்வாய் வடிகால் இல்லாததால் உபரி நீர் செல்ல வழி இல்லாமல் புறம்போக்கு நிலத்திலும் மற்றும் பட்டா நிலங்களின் பெயரில் பாய்ந்து செல்வதாகவும், அம்மாதிரி பரவலாக வாதியின் நிலங்களின் பெயரில் பாய்ந்து செல்வதாகவும், அதற்காக வாதியின் நிலங்களில் ஓரத்தில் மூன்று அடி ஆழத்திற்கு கால்வாய் உண்டாக்க வேண்டும் என்றும், அம்மாதிரி கால்வாய் உண்டாக்கிய பின் அதன் பேரில் ஸ்லாப்புகள் வைத்து மூடி, மூடிய பின் அதன் மேல் சுற்றுச்சுவர் கட்டிக்கொள்ள வேண்டும் என்று பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் வட்டாட்சியர் தெரிவித்ததாகவும், இம்மாதிரி கால்வாய் நிரம்பி வழியும் காலத்தில் அரசு ஆவணங்களில் உபரி மழை நீர் வடிய ஏற்கனவே கால்வாய் படம் உள்ளது என்றும், அதற்கு மாறாக இம்மாதிரி கால்வாய் தோண்ட வேண்டுமென்று வருவாய் துறையில் கேட்பது சரியல்ல என்று வாதி கூறியதற்கு உரிய பதில் அளிக்கவில்லை என்றும், கடந்த 25.06.2023 அன்று வட்டாட்சியர் வாதி தன்னுடைய நிலத்தில் ஏதாவது சுற்றுச்சுவர் கட்ட முற்பட்டால் அதற்கு முன்னரே அவரது அனுமதி பெற்றுதான் சுற்றுச்சுவர் கட்ட வேண்டும் என்று அறிவுறுத்தியதாகவும் அப்படி அனுமதி இல்லாமல் ஏதாவது சுற்றுச்சுவர் கட்டப்பட்டால் அதனை வருவாய் துறை மூலமாக இடிக்க நேரிடும் என்று பயமுறுத்தியதாகவும், வாதியின் சொத்துக்களுக்கும் வாதியின் தந்தை ஜிசி ஜெயின் சொத்துக்களுக்கும் புல எண்கள்37/1, 37/3, 37/4 மற்றும் 38/2 பட்டா நிலங்கள் உள்ளன என்றும், பிரதிவாதி சந்தவேலூர் மக்களை திருப்திபடுத்தும் பொருட்டும் அவர்களிடமிருந்து பணம் பறிக்கும் பொருட்டும் சட்டத்திற்கு புறம்பான செய்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும், அம்மாதிரி தனியார் சொத்துக்களில் வருவாய் துறை அதிகாரிகள் பிரவேசிக்கவோ உத்தரவு வழங்கவோ சட்டப்படி எந்த அதிகாரமும் இல்லை என்றும், இவ்வழக்கினை பிரதிவாதி பெயரில் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளதாகவும், தற்போது வாதி தன்னுடைய பட்டா நிலங்களை மழைநீரில் மூழ்காமல் இருக்க வேண்டி சுற்றுச்சுவர் வைப்பதை தடுக்க பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக செயலில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

8. மேலும் பி.சா.1 சாட்சியத்தில் வாதியும் அவரது குடும்பத்தினரும் கால்வாய்க்கு பக்கத்தில் இருந்த அனைத்து நிலங்களையும் கிரயம் பெற்ற பின்னர் 08.10.2022 அன்று ஏராளமான குன்று மண்ணை கொண்டு அந்த ட்ரெயின் சேனலை சமப்படுத்தி ஆக்கிரமித்து முற்றிலுமாக தூற்று அவர்களுடைய இதர நிலங்களுடன் சேர்த்து விட்டதாகவும், பிரதிவாதி

சந்தவேலூர் கிராமத்தின் ஊராட்சி மன்ற தலைவர் என்பதால், வாதி செய்த இந்த அடாவடிதனத்தை பிரதிவாதி கிராம மக்களுடன் சேர்ந்து எதிர்த்ததாகவும், அதனால் வெகுண்ட வாதி பிரதிவாதி பெயரில் தனிப்பட்ட பெயரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரதிவாதி வருவாய் மற்றும் சர்வே துறையினரை வரவழைத்து வாதி செய்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டியதாகவும், ஆனால் அவர்கள் அனைவரும் ட்ரெயின் சேனலுக்கு என்று தனி சர்வே நம்பர் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அந்த ட்ரெயின் சேனல் இருக்கும் பகுதி வாதியின் பட்டா நிலத்திலும் இருப்பதாக சொல்லி வாதிக்கு சாதகமாக மாறிவிட்டதாகவும், அந்த ட்ரெயின் சேனலானது வாதிக்கு சொந்தமான நிலங்களுக்கு நடுவில் செல்வதாகவும், ஆனால் அது வாதிக்கு சொந்தம் என்று சொல்வது தவறு என்றும், மேலும், அந்த ட்ரெயின் சேனல் போக அதன் இரண்டு புறங்களிலும் இருக்கும் மீதி நிலத்திற்கு தான் வாதிக்கு சொந்தமானது என்றும், மேலும் அவ்வாறான நீர் பிடிப்பு பகுதிக்கு வாதி உரிமை கோருவது சரியல்ல என்றும், மேலும் அந்த ட்ரெயின் சேனல் பொது மக்களுக்கும் சமுதாயத்திற்கும் பாத்தியப்பட்டதாகும் என்றும், அதை ஆக்கிரமிக்கவோ அல்லது தன் நிலத்துடன் சேர்த்துக் கொள்ளவோ வாதிக்கு எந்த உரிமையும் தகுதியும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

9. மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணையின்போது இந்த வழக்கமானது சர்வே எண் 37 சம்பந்தப்பட்டது என்றால் சரிதான் அந்த சர்வே எண்ணில் உள்ள அனைத்து சொத்துக்களையும் நீங்கள் வாங்கி விட்டீர்களா என்றால் வாங்கி விட்டேன். அதேபோல் பக்கத்தில் உள்ள சர்வே எண் 36 இல் உள்ள முழு சொத்தையும் வாங்கி விட்டீர்களா என்றால் முழு சொத்தையும் வாங்கவில்லை. சர்வே எண் 41 ஏரி உள்ளது என்றால் தாங்கல் ஏரி உள்ளது. உங்களிடம் காட்டப்படுகின்ற அரசு வரைபடத்தில் கொசவன் தாங்கல் என்கிற நீர் பிடிப்பு பகுதி உள்ளது என்றால் சரிதான். நீர் நிறைந்து விட்டால் நிறைந்து ஓடுவதற்கு ஒரு கால்வாய் உள்ளது என்றால் சரிதான். அந்த வழிந்து ஓடும் கால்வாய் சர்வே நம்பர் 36 மற்றும் 37 ஆகிய இரண்டுக்கும் நடுவில் செல்கிறது என்றால் சரி இல்லை. அந்த கால்வாய் தான் சந்தவேலூர் பெரிய ஏரிக்கு தண்ணீர் செல்லும் கால்வாய் என்றால் மறுக்கிறேன். கால்வாய் போக மீதி உள்ள இடங்கள்தான் சர்வே நம்பர் 36 மற்றும் 37 என்றால் சரியில்லை. சர்வே நம்பர் 37 இல் உள்ள நீர் செல்லும் பாதையை ஆக்கிரமித்து நீங்கள் துராக்கிரமாக கட்டுமானம் செய்து விட்டீர்கள் என்றால் மறுக்கிறேன். என்னுடைய நிலத்தை சுற்றிலும் பட்டா நிலம் உள்ளது. நீர் பிடிப்பு காலங்களில் உபரி நீரானது தாங்கலை சுற்றி உள்ள பட்டா நிலங்களில் வழிந்து பரவலாக வழிந்து ஓடி காய்ந்து விடும். அவ்வாறு இருக்கையில் என்னுடைய பட்டா நிலத்தில் உபரி நீரானது

உட்புகாமல் இருக்க சுற்றுசுவரை கட்டுமானம் செய்வதற்கு எனக்கு முழு உரிமை உள்ளது. வேண்டாமணி சந்தவேலூர் பஞ்சாயத்து தலைவர் ஆவார். வேண்டாமணி என்பவர் தாங்கலுக்கும் பஞ்சாயத்துக்கும் சம்பந்தம் இல்லாத நிலையில், வருவாய் துறையினரிடம் தவறான தகவல்களை கூறி மேலும் என்னுடைய இடத்தில் சுற்று சுவர் எழுப்புவது என்றால் அதில் வடிகால் விட்டு மேற்பரப்பில் ஸ்லாப் போட்டு காம்பவுண்ட் கட்ட வேண்டும் என்று வேண்டாமணியின் தூண்டுதலின் பேரில் வருவாய் துறை அதிகாரிகள் வாய்மொழியாக மட்டுமே கூறியதால் நான் மேற்படி வேண்டா மணி என்பவர் மீது மட்டும் வழக்கு தொடர்ந்தேன்.

10. மேலும் பி.சா.1 குறுக்கு விசாரணையின்போது, நீங்கள் உங்கள் கிராமத்தில் பூர்வீகமாக இருக்கிறீர்கள் என்றால் சரிதான். உங்களுடைய கிராம ஆவணங்கள் யாரிடம் உள்ளது என்றால் கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் வட்டாட்சியர் ஆகியோர் வசம் இருக்கும். கொசவன் தாங்கல் என்கிற இடத்தின் சர்வே எண் 41 ஆகும். தாங்கல் வேறு ஏரி வேறு என்றால் வெவ்வேறானவை தான். ஏரி நிரம்பி விட்டால் அதிலிருந்து உபரி நீர் வெளியேற களங்கள் ஃபுல் டேங்க் உபரி தண்ணீர் வெளியேறும் வழி இருக்கும் என்றால் சரிதான். மேற்படி கொசவன் தாங்கல் கலங்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தாங்கலுக்கு நீர் வரத்து எங்கிருந்து வருகிறது என்றால் குறைந்தபட்சம் 600 அல்லது 700 ஏக்கர் நிலத்திலிருந்து வழிந்து தண்ணீர் கால்வாய் வழியாக வரும். எந்த எந்த சர்வே எண்ணிலிருந்து கால்வாயில் இருந்து தண்ணீர் வருகிறது என்று சொல்ல முடியுமா என்றால் சுங்குவார்சத்திரம், சந்தை வேலூர், பொளச்சூர், ஆண்டாள் நகர், அன்னை வேளாங்கண்ணி நகர், ஜோதி நகர், கருமாரியம்மன் கோயில் தெரு, கங்கா கார்டன் ஏ, கங்கா கார்டன் சி, ஆண்டாள் சி, கிருஷ்ணா நகர், ஏ.பி.எம். காலனி அதற்கு பக்கத்தில் காலியாக உள்ள சர்வே நம்பர் தெரியாத இடங்களில் இருந்து தாங்கலுக்கு வருகிறது. வடிகால் இருப்பதாக சொல்லி உள்ளீர்கள் சர்வே எண் 36 மற்றும் 37 இடையில் செல்வதாக சொல்கிறீர்கள் அதற்கு ஆவணம் தாக்கல் செய்தீர்களா என்றால் கிராம கால்வாய் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். கால்வாய்க்கு என்று தனிப்பட்ட சர்வே நம்பர் உண்டா என்றால் கிடையாது. பிவாதியோ அல்லது அவர்களது மூதாதையர்கள் எத்தனை ஆண்டுகளாக ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரிந்து சுமார் 25 அல்லது 30 ஆண்டுகளாக அனுபவித்து வந்துள்ளார்கள். பி.சா.ஆ2ல் 9போட்டோ போட்டு உள்ளீர்கள் எந்த சர்வே நம்பர் எந்த இடம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியில்லை. வழக்கிற்கும் வழக்கு சொத்து இருக்கும் போட்டோவிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரி இல்லை. சர்வே

எண் 37/5ஏ1ஏ மற்றும் 37/5ஏ1சி வழக்கு சொத்து என்றால் தெரியாது. சர்வே எண் 37 நீர்ப்பிடிப்பு ஆகும். 37 ல் 1 மற்றும் 2 உட்பிரிவில் உள்ள சர்வே எண்கள் நீர்ப்பிடிப்பு என்று சொன்னால் சரிதான். உட்பிரிவு 3, 4 மற்றும் 5 ஆகியவை நீர்ப்பிடிப்பு இல்லை என்று சொன்னால் சரியில்லை. வடிகால் கால்வாய் பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் சரியில்லை. தலைவர் என்கிற முறையில் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு எப்பொழுதாவது கடிதம் அனுப்பினீர்களா என்றால் அனுப்பி உள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாசில்தார் பொதுப்பணித்துறை ஊழியர்கள், சர்வேயர் அழைத்துச் சென்று காட்டினீர்களா என்றால் காட்டி உள்ளேன். அவர்கள் ஆவணங்களை வைத்து சரி பார்த்தார்களா என்றால் சரி பார்த்தார்கள். வாதிகள் அவர்களுடைய சொத்தை தான் அனுபவித்து வருகிறார்கள் அவர்களை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக எதிர்வழக்காடி கொண்டிருக்கிறீர்கள் என்றால் சரியில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

11.இவ்வழக்கில் வாதி தரப்பில் வழக்கு சொத்து வாதியின் தாயார் சாந்தா தேவி கடந்த 24.08.1982 தேதியில் ஆவண எண்.2064/1982 படியாக கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்து வாதியின் தாயார் பெயரில் பட்டா எண்.880 வழங்கப்பட்டுள்ளதாகவும், பின்னர் வாதியின் தாயார் வாதிக்கு வழக்கு சொத்தினை 27.03.2014 தேதியில் தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்து வாதி பெயருக்கு பட்டா எண்.2364 வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.1 ன் படியாக வழக்கு சொத்தினை பொறுத்து வாதி தாயார் கிரையம் பெற்று வா.சா.ஆ.4ன் படியாக வாதி தாயார் பெயரில் பட்டா எண்.880 வழங்கப்பட்டுள்ளதாகவும், வா.சா.ஆ.2ன் படியாக பின்னிட்டு வாதி தாயார் வழக்கு சொத்தினை வாதிக்கு தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளதாகவும், வா.சா.ஆ.5ன் படியாக வாதி பெயரில் பட்டா எண்.2364 வழங்கப்பட்டுள்ளதாக காணப்படுகிறது.

12. இந்நிலையில் பிரதிவாதி தரப்பில் வாதி தாயார் வழக்கு சொத்தினை கிரையம் பெற்றுள்ளதை பொறுத்தும், பின்னிட்டு வாதி தாயார் வழக்கு சொத்தினை வாதிக்கு தான செட்டில்மெண்ட் செய்துள்ளதை பொறுத்து ஆட்சேபனை எதுவும் செய்யப்படவில்லை. அதேசமயம் பிரதிவாதி தரப்பில் கொசவன்தாங்கல் சர்வே எண்.41ல் உள்ளதாகவும், அது நீர் நிறைந்து ஓடும் கால்வாய் புல எண்.36 மற்றும் 37க்கு இடையே செல்வதாகவும், வாதி மற்றும் அவரது குடும்பத்தினர் புல எண்.37ஐ கிரையம் பெற்று மேற்படி உபரி நீர் செல்லும் கால்வாயை மூடி ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானம் செய்துள்ளதாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

13. இந்நிலையில், வாதி தரப்பில் வழக்கு சொத்து புல எண்.37/5ஏ1ஏ மற்றும் 37/5ஏ1சி ஆகியவற்றை நீர்பிடிப்பு பகுதி இல்லை என்றும், அதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றும், பிரதிவாதி சந்தவேலூர் பஞ்சாயத்து தலைவர் என்பதால் வருவாய் துறையினரை அழைத்து வந்து வழக்கு சொத்தில் வாதி சுற்றுசுவர் கட்டுவதை தடை செய்ய முற்படுவதாக குறிப்பிட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.3 புலப்படம் படியாக சர்வே எண்.37/5ஏ1ஏ மற்றும் 37/5ஏ1சி ஆகியவற்றில் நீர்பிடிப்பு பகுதி உள்ளதாக குறிப்பிட்டு எதுவும் காணப்படவில்லை. மேலும் வா.சா.ஆ.6ன் படியாக சர்வே எண்.37/5ஏ1பி –க்கு வாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், வா.சா.ஆ.7ன் படியாக வாதி சர்வே எண்.37/5ஏ1பி–ல் 1650 மற்றும் 425 சதுரடி ஆகியவற்றினை கிரையம் பெற்றுள்ளதாகவும், வா.சா.ஆ.8ன் படியாக 37/5ஏ1பி அடங்கல் கணக்கில் வீட்டு மனை என்று உள்ளதாக காணப்படுகிறது. இந்நிலையில் பி.சா.ஆ.1ன் படியாக சாந்தவேலூர் கிராம வரைபடம் படியாக கொசவன்தாங்கல் சர்வே எண்.41ல் உள்ளதாகவும், அதிலிருந்து வெளியேறும் கால்வாய் நீர் பிடிப்பு பகுதிகளானது சர்வே எண்.36ன் வழியாக சென்று மற்றும் பிற சர்வே எண்களில் சென்று சர்வே எண்.336ல் உள்ள பெரிய ஏரியில் நீர் சென்றடைவதாக காணப்படுகிறது. இந்நிலையில் பிரதிவாதி குறிப்பிட்டுள்ளபடியாக சர்வே எண்.36 மற்றும் 37க்கு இடைப்பட்ட பகுதியில் மேற்படி கால்வாய் நீர்பிடிப்பு பகுதி செல்வதாக காணப்படவில்லை. மேலும் பி.சா.ஆ.3ன் படியாக கிராம விவர குறிப்பில் கொசவன்தாங்கல் சர்வே எண்.41ல் அமைந்துள்ளதாகவும், சர்வே எண்.37/1–ல் 48 செண்ட் ஆப்ரஹாம் நாயுடு பட்டா எண்.25 என்ற பகுதி நீர்ப்பிடி உள்ளதாகவும் சர்வே எண்.37/2–ல் 43 செண்ட் ஜோசப் நாயுடு பட்டா எண்.156 என்ற பகுதி நீர்ப்பிடி உள்ளதாகவும், சர்வே எண்.37/3–ல் 28 செண்ட் மரியம்மாள் பட்டா எண்.1758 என்றும், சர்வே எண்.37/4–ல் 20 செண்ட் செங்கம்மாள் பட்டா எண்.1757 என்றும், சர்வே எண்.37/5–ல் மற்றும் 37/5ஏ–ல் 3.73 செண்ட் சையது அகமது சுல்தான் ராவுத்தர் பட்டா எண்.16 என்றும் உள்ளதாக காணப்படுகிறது. அதன்படியாக சர்வே எண்.37/5 மற்றும் 37/5ஏ பகுதிகளில் நீர்பிடிப்பு என்று குறிப்பிடபடவில்லை என்பதாக அறிய முடிகிறது.

14. இந்நிலையில் இவ்வழக்கில் வா.சா.1 குறுக்கு விசாரணையின்போது சர்வே எண்.37ல் உள்ள அனைத்து சொத்துக்களையும் வாங்கிவிட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில், இவ்வழக்கானது வாதி தரப்பில் சர்வே எண்.37/5ஏ1ஏ–37.30 ஏர்ஸ் மற்றும் 37/5ஏ1சி –0.80 ஏர்ஸ் ஆகியவற்றிற்கு மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக காணப்படுகிறது. இந்நிலையில்

பி.சா.ஆ.1 மற்றும் 3ன் படியாக புல எண்.37/5 மற்றும் 37/5ஏ பகுதிகளில் நீர்பிடிப்பு உள்ளதாக குறிப்பிட்டு சொல்லப்படாத நிலையில் மேற்படி சர்வே எண் உட்பிரிவுகளான வழக்கு சொத்து வழியாக தாங்கல் நீர்பிடிப்பு வாய்க்கால் செல்வதாக பிரதிவாதி குறிப்பிட்டுள்ள சாட்சியம் ஏற்புடையதாக இல்லை. மேலும் வழக்கு சொத்தினை பொறுத்து வாதி பெயருக்கு பட்டா ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதில் வழக்கு சொத்தில் நீர்பிடிப்பு உள்ளதாக குறிப்புகள் எதுவும் சொல்லப்படவில்லை.

15. இந்நிலையில் வாதி தரப்பில் பிரதிவாதி சாந்தவேலூர் ஊராட்சி மன்ற தலைவர் என்பதால் வாதி பட்டா இடத்தில் சுற்றுச்சுவர் எழுப்புவதை தடுக்கும் நோக்கில் வருவாய் அதிகாரிகளை வைத்து வாதிக்கு சட்ட விரோதமாக இடையூறு செய்வதாக குறிப்பிட்டுள்ள நிலையில், வாதி தரப்பில் இவ்வழக்கில் வருவாய் துறை அலுவலர்களை தரப்பினராக சேர்க்கவில்லை. இந்நிலையில் பிரதிவாதி தரப்பில் வாதி வழக்கு சொத்து பகுதியில் தாங்கல் நீர்பிடிப்பு வாய்க்கால் பகுதி செல்வதாகவும், அதனை வாதி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி உள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், பிரதிவாதி தரப்பில் வழக்கு சொத்து சம்மந்தமாக வருவாய் அலுவலர்களை சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. இந்நிலையில் பி.சா.ஆ.2 புகைப்படங்கள் படியாக மட்டுமே வாதி வழக்கு சொத்து பகுதி தாங்கல் நீர்பிடிப்பு வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ளதாகவும், அதனை வாதி ஆக்கிரமித்து சுற்றுச்சுவர் எழுப்புவதாக குறிப்பிட்டுள்ள சங்கதிகளை நிரூபணம் செய்யக் கூடியதாக இல்லை.

16. இந்நிலையில் வா.சா.1 சாட்சியம் வா.சா.ஆ.1முதல் 9ன் படியாக வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதாகவும், வாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்துக்களில் தாங்கல் நீர்பிடிப்பு வாய்க்கால் பகுதி எதுவும் இல்லை என்பதாகவும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதிவாதி வாதியின் தாவா சொத்துக்கள் அனுபவத்தினை எவ்விதத்திலும் சட்டப்படியாக அல்லாமல் வேறு வகையில் இடையூறு செய்யக்கூடாது என்பதாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியது என்பதாக இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா 1 வாதிக்கு ஆதரவாக தீர்வு செய்யப்படுகிறது.

**6.எழுவினா 2க்கான தீர்வு**

17. எழுவினா 1ன்படியாக இவ்வழக்கு பரிகாரங்கள் பொறுத்து தீர்வு செய்யப்பட்டுவிட்டதால் இவ்வழக்கில் வாதிக்கு வேறு பரிகாரம் ஏதும் இல்லை என்று இந்த எழுவினா முடிவு செய்யப்படுகிறது.

இறுதியாக வாதியின் வழக்கு சொத்துக்கள் அனுபவத்தினை பிரதிவாதியோ அவரது ஆட்கள் சட்டப்படியாக அல்லாமல் வேறு வகையில் இடையூறு செய்யக் கூடாது என்பதாக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், இவ்வழக்கின் தன்மையை பொறுத்து செலவுத் தொகை இன்றி இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 30.06.2026 இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./அ.முகம்மது அலி
கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.

1. வாதி தரப்பு சாட்சிகள்:

1. வா.சா.–1 வினோத் குமார் (வாதி)

2. வாதி தரப்பு சான்றாவணங்கள் :

| வ. எண் | குறியீடு | தேதி | ஆவண விவரம் |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 24.08.1982 | வாதி தாயார் சாந்தா அம்மாள் கிரைய ஆவணம் எண்.2064/1982 சான்றிட்ட நகல். |
| 2 | வா.சா.ஆ.2 | 27.03.2014 | சாந்தா தேவி வாதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் எண்.1327/2024 சான்றிட்ட நகல் |
| 3 | வா.சா.ஆ.3 | 31.03.2008 | புல எண்.37க்கான வரைபடம் நகல். |
| 4 | வா.சா.ஆ.4 | 17.04.2015 | சாந்தா தேவி பெயரில் உள்ள பட்டா எண்.880 கணிணி நகல். |
| 5 | வா.சா.ஆ.5 | 12.09.2022 | வாதி வினோத்குமார் பெயரில் உள்ள பட்டா எண்.2364 கணிணி நகல். |
| 6 | வா.சா.ஆ.6 | 28.08.2021 | வாதி வினோத்குமார் பெயரில் உள்ள பட்டா எண்.3191 கணிணி நகல். |
| 7 | வா.சா.ஆ.7 | 15.06.2018 | வாதி கிரைய பத்திரம் ஆவண எண்.1907/2018 சான்றிட்ட நகல். |

| | | | |
|---|---|---|---|
| 8 | வா.சா.ஆ.8 | -- | வாதி பெயரில் உள்ள அடங்கல் பசலி-1431 |
| 9 | வா.சா.ஆ.9 | 10.10.2020 | வாதி பெயரில் உள்ள பட்டா எண்.2364 கணிணி நகல். |

<u>3. பிரதிவாதி தரப்பு சாட்சி :</u>

1. பி.சா.-1 வேண்டாமணி (பிரதிவாதி)

<u>4. பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| வ. எண் | குறியீடு | தேதி | ஆவண விவரம் |
|---|---|---|---|
| 1 | பி.சா.ஆ.1 | -- | தமிழ்நாடு அரசு சந்தவேலூர் கிராமத்தின் கிராம வரைபடம் அசல். |
| 2 | பி.சா.ஆ.2 | -- | வாதி ஆக்கிரமிப்புக்கான புகைப்படங்கள் 9 எண்ணிக்கை மற்றும் CD அசல். |
| 3 | பி.சா.ஆ.3 | 01.10.1962 | சந்தவேலூர் கிராமத்தின் விவரக் குறிப்பு நகல். |
| 4 | பி.சா.ஆ.4 | 23.05.2007 | Tamil Nadu Protection of Tanks and Eviction of Encroachment Act 2007 சட்டத்திற்கான தமிழ்நாடு அரசின் அரசிதழ் நகல் |

ஒம்./அ.முகம்மது அலி
கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.